


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், தோழமைக் கட்சித் தலைவர்கள் கி.வீரமணி, கு.செல்வப்பெருந்தகை, வைகோ, பெ.சண்முகம், மு.வீரபாண்டியன், பேராசிரியர் காதர் மொகிதீன், தொல் திருமாவளவன், கமல்ஹாசன், சுதீஷ், பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா, ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிமுன் அன்சாரி, நெல்லை முபாரக், கருணாஸ், செல்வகுமார், இரா.அதியமான், பழ.ஆசைத்தம்பி, பொன்குமார் உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.3.2026) அவரது இல்லத்தில், 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் என்.பாண்டி, எம். சின்னதுரை, ஆர். செல்லசுவாமி, எல்.சுந்தரராஜன், திருமதி டி.லதா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் உள்ளார்.

### தலைவர் கலைஞரின்

# திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டேன்!

### தேர்தல் பரப்புரை தொடங்குவதற்கு முன் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 1–

தேர்தல் பரப்புரைப் பயணம் மேற்கொள்ள புறப்படுவதற்கு முன், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலை தளப் பதிவில், தலைவர் கலைஞரின் திருவாரூருக்குப் புறப்பட்டு விட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தேர்தல் பரப்புரைப் பயணத்தைத் தொடங்க, தலைவர் கலைஞர் பிறந்த திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டேன்... மக்களுடன் இரண்டறக் கலக்கும் இப்பயணங்களின் வாயிலாக உங்களைச் சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு, #Dravidian Model 2.0வுக்கு ஆதரவு கேட்டு வருகிறேன். #வெல்வோம்_ஒன்றாக #VoteForDMK**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# மதுரை கிழக்கு அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கழகத்தில் இணைந்தார்!

## அ.ம.மு.க. நிர்வாகிகளும் இணைந்தனர்!







**சென்னை, ஏப். 1 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மதுரை வடக்கு மாவட்டம் அ.தி.மு.க.வைச் சேர்ந்த மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கா.தமிழரசன் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த மேலூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கா.பொன்னுச்சாமி - மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளர் யூ.மீரா உசேன், மேலூர் நகர்மன்ற உறுப்பினர் டி.திவாகர், மேலூர் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அம்மாபேரவை செயலாளர் ஆர்.உதயகுமார், இணைச்செயலாளர் கே.பி.உதயசங்கர், மாணவர் அணிச் செயலாளர் ஏ.கரும்புசெல்வம், இலக்கிய அணிச் செயலாளர் வி.ஆர்.குணாநிதி, இலக்கிய அணி பொருளாளர் பி.பாலாஜி, கிளைச் செயலாளர்கள் பதினெட்டாங்குடி ஆர்.செல்வகுமார், அரசப்பன்பட்டி வி.செல்வம் (எ) வீரணன், மேலமைப்பு பிரதிநிதி கொட்டகுடி வி.பால்சாமி இளைஞர் பாசறை செயலாளர் ஆ.இளவரசன், ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், 30.3.2026 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், அ.தி.மு.க.வின் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கா.தமிழரசன் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த மேலூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கா.பொன்னுச்சாமி - மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளர் யூ.மீரா உசேன், மேலூர் நகர்மன்ற உறுப்பினர் டி.திவாகர் மேலூர் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அம்மாபேரவை செயலாளர் ஆர்.உதயகுமார், இணைச்செயலாளர் கே.பி.உதயசங்கர், மாணவர் அணிச் செயலாளர் ஏ.கரும்புசெல்வம், இலக்கிய அணிச் செயலாளர் வி.ஆர்.குணாநிதி, இலக்கிய அணி பொருளாளர் பி.பாலாஜி, கிளைச் செயலாளர்கள் பதினெட்டாங்குடி ஆர்.செல்வகுமார், அரசப்பன்பட்டி வி.செல்வம் (எ) வீரணன், மேலமைப்பு பிரதிநிதி கொட்டகுடி வி. பால்ச்சாமி, இளைஞர் பாசறை செயலாளர் ஆ.இளவரசன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**அ.ம.மு.க. நிர்வாகிகள்!**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மதுரை வடக்கு மாவட்டம் அ.ம.மு.க.வைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் வீர. வெற்றிப்பாண்டியன் தலைமையில் அ.ம.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட இளைஞர் - இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் எம்.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞர் பாசறை துணைச்செயலாளர் பி.குருமூர்த்தி ஆகியோர் தி.மு.க. வில் இணைந்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், 30.3.2026 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மதுரை வடக்கு மாவட்டம் அ.ம.மு.க.செய்தித் தொடர்பாளர் வீர. வெற்றிப்பாண்டியன் தலைமையில் அ.ம.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட இளைஞர் - இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் எம்.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞர் பாசறை துணைச் செயலாளர் பி.குருமூர்த்தி ஆகியோர் தி.மு.க. வில் இணைந்தனர்.

அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி, ஆகியோர் உடனிருந்தனர்.